**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. STC 782 of 2022 |

Depositions of DW - 1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : பாலசுப்ரமணியம்

Father's Name : த/பெ. பழனிசாமி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd **day of January** 2024.

**முதல் விசாரணை –**

1. அங்கமுத்து மகன் முத்துக்குமார் என்பவரின் மூலமாக எனக்கு இவ்வழக்கின் மனுதாரரான சண்முகத்தை 2013ம் வருடம் முதல் தெரியும். நான் 2013ம் வருடம் முத்துக்குமாரிடம் ரூ.5லட்சம் என்னுடைய தொழிலுக்காக கேட்டிருந்தேன். அதனால் முத்துக்குமார் வீட்டிற்கு அருகில் வசித்து வட்டி தொழில் செய்து வந்த மனுதாரர் சண்முகத்திடமிருந்து ரூ.5லட்சத்தை நானும் முத்துக்குமாரும் சென்று கேட்டோம்.

2. அதற்கு மனுதாரர் என்னை சூலூர் அரசு மருத்துவமனைக்கு மேற்கு பக்கத்தில் உள்ள அவருடைய அலுவலகத்திற்கு வருமாறு கூறினார். அதனால் நானும் முத்துக்குமாரும் மனுதாரருடைய அலுவலகத்திற்கு 2013ம் வருடம் சென்றிருந்தோம். அங்கு வைத்து மனுதாரர், சக்திவேல், முருகேசன் ஆகியோர் பணம் கடனாக கொடுப்பதற்கு எனக்கு சொத்து ஏதாவது இருநத்தால் அது குறித்து பொது அதிகாரம் எழுதி

கொடுக்க வேண்டும் என்றும் மேலும் கடனுறுதி சீட்டு, காசோலை, வெற்று தாள் மற்றும் பச்சை தாளில் கையொப்பம் செய்து கொடுக்கவேண்டும் என்று கூறினார்கள்.

3. அதனால் பீடம்பள்ளியில் என்னுடைய சொத்து குறித்து சிங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து பத்திரம் எழுதி கொடுத்து விட்டு கடன் பெற்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் பொதுஅதிகார பத்திரத்தின் இணையத்தில் பெறப்பட்ட ஆவணத்தின் நகல் ஆகும். அதில் இவ்வழக்கின் மனுதாரருடைய சாட்சி கையொப்பம் ஏற்கனவே மனுதாரரை குறுக்கு விசாரணை செய்தபோது எ.ம.சா.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **(மேற்படி 09.05.2013 ம் தேதியிட்ட பொதுஅதிகார பத்திரத்தின் இணையத்தில் பெறப்பட்ட நகல் எ.ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

4. மேலும் பட்டணம் வங்கிக்குரிய என்னுடைய 2 கையொப்பம் மட்டும் செய்து வெற்று காசோலைகள், 2 கையொப்பம் மட்டும் செய்து வெற்று கடனுறுதி சீட்டுகள், 2 கையொப்பம் மட்டும் செய்து வெற்று வெள்ளை தாள்கள் மற்றும் 2 கையொப்பம் மட்டும் செய்து வெற்று பச்சை தாள்கள் ஆகியவற்றை சண்முகம், முருகேஷ், சக்திவேல் ஆகியோரிடம் கொடுத்தேன். அதன்பின்னர் ரூ.5 லட்சத்தினை மாதம் ரூ.3/-வட்டிக்கு கடனாக பெற்றேன்.

5. பொதுஅதிகார பத்திரம் எழுதி கொடுத்த பின்னர் 15 நாட்கள் கழித்து முருகேசன் பெயரில் இருந்த பவரை சக்திவேல் பெயருக்கு கிரைய ஒப்பந்த பத்திரமாக மாற்றி எழுதியிருக்கிறார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் கிரைய ஒப்பந்த பத்திரம் இணையத்தில் பெறப்பட்ட ஆவணத்தின் நகல் ஆகும். அதில் இவ்வழக்கின் மனுதாரருடைய சாட்சி கையொப்பம் ஏற்கனவே மனுதாரரை குறுக்கு விசாரணை செய்தபோது எ.ம.சா.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **(மேற்படி 24.05.2013 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தின் இணையத்தில் பெறப்பட்ட நகல் எ.ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

6. நான் மாதமாதம் ரூ.15 ஆயிரத்தை வட்டியாக மனுதாரரின் அலுவலகத்திற்கு சென்று செலுத்தி வந்தேன். ஒரு வருடத்திற்குள் என்னால் கடன் தொகையை திருப்பி கொடுக்க இயலாததால் கால நீட்டிப்பு செய்து கால நீட்டிப்பு பத்திரத்தை பொதுஅதிகார முகவரான முருகேசன் எழுதி கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் கிரைய ஒப்பந்த கால நீட்டிப்பு பத்திரம் இணையத்தில் பெறப்பட்ட ஆவணத்தின் நகல் ஆகும். அதில் இவ்வழக்கின் மனுதாரருடைய சாட்சி கையொப்பம் ஏற்கனவே மனுதாரரை குறுக்கு விசாரணை செய்தபோது எ.ம.சா.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **(மேற்படி 27.06.2014 ம் தேதியிட்ட கால நீட்டிப்பு ஒப்பந்த பத்திரத்தின் இணையத்தில் பெறப்பட்ட நகல் எ.ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

7. அதன்பிறகு 2016ம் வருடம் 4வது மாதம் கடன் தொகையை திருப்பி செலுத்திவிட்டு பத்திரத்தை ரத்து செய்வதற்காக பத்திரத்தையும் மற்ற ஆவணங்களையும் எடுத்து வருமாறு கூறியிருந்தேன். வந்தவர்கள் பத்திரத்தை மட்டும் எடுத்து வந்தார்கள். காசோலைகள், கடனுறுதி சீட்டுகள், வெள்ளை தாள்கள் மற்றும் பச்சை தாள்களை கரூரில் அலுவலகத்தில் வைத்து வந்து விட்டதாக தெரிவித்தார்கள். கிரைய ஒப்பந்த பத்திரம் மற்றும் பொது அதிகார பத்திரங்களை மட்டும் ரத்து செய்து கொடுத்தார்கள். மீதி ஆவணங்களை அலுவலகத்திற்கு சென்று எடுத்து அனுப்பி வைப்பதாக கூறினார்கள். ஆனால் அனுப்பவில்லை.

8. என்னிடம் காண்பிக்கப்படும் 25.04.2016ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்த ரத்து பத்திரம் மற்றும் பொது அதிகார பத்திரத்தின் இணையத்தில் பெறப்பட்ட ஆவணத்தின் நகல்கள் ஆகும். அதில் இவ்வழக்கின் மனுதாரருடைய சாட்சி கையொப்பம் ஏற்கனவே மனுதாரரை குறுக்கு விசாரணை செய்தபோது எ.ம.சா.4 மற்றும் எ.ம.சா.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **(மேற்படி 25.04.2016ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்த ரத்து பத்திரம் மற்றும் பொது அதிகார பத்திரத்தின் இணையத்தில் பெறப்பட்ட ஆவணத்தின் நகல்கள் எ.ம.சா.ஆ.9 மற்றும் எ.ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

9. சூலூர் அலுவலகத்திற்கு ஆவணங்களை திரும்பி பெறுவதற்காக வந்து சென்று கொண்டிருந்தேன். மேற்படி ஆவணங்களை சூலூர் அல்லது கரூர் அலுவலகத்தில் வைத்தோமா என்று தெரியவில்லை என்றும் மேலும் அவைகள் கிடைத்தால் திருப்பி கொடுப்பதாக கூறினார்கள். மேற்படி ஆவணங்களுக்கு அவர்கள் பொருப்பு என்றும் அவற்றை தவறாக பயன்படுத்த மாட்டோம் என்றும் உறுதி அளித்தார்கள்.

10. அதன்பின்னர் 2020ம் வருடம் மனுதாரர் சண்முகத்திடம் ரூ.4 லட்சத்தினை கடனாக 2.25 வட்டிக்கு பெற்றேன். அத்தொகையை 2021க்குள்ளாக தவணை முறையில் ரூ.5,38,000/-வரை என்னுடைய பெடரல் வங்கி, பட்டணம் கிளை வங்கி கணக்கிலிருந்து மனுதாரருடைய பெடரல் வங்கி கிளைக்கு அனுப்பினேன். அந்த வரவு செலவு அத்துடன் முடிந்துவிட்டது. அதன்பின்னர் மனுதாரர் ரூ.15 லட்சத்திற்கு காசோலையை வசூல் செய்து பின்னர் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றை அனுப்பியிருந்தார்.

11. அதனால் நான் என்னுடைய வழக்கறிஞரின் மூலமாக சண்முகம், சக்திவேல் மற்றும் முருகேசன் ஆகியோர்கள் மற்றும் அவருடைய வழக்கறிஞருக்கு பதில் அறிவிப்பு அனுப்பினேன். நான் மனுதாரருக்கு காசோலை எதுவும் கொடுக்கவில்லை. ஏற்கனவே கொடுத்திருந்த காசோலையை தவறாக பயன்படுத்தி விட்டார்கள். மேற்படி மூவரையும்

தொலைபேசியின் வாயிலாகவும் நேராகவும் தொடர்பு கொள்ள இயலவில்லை. மனுதாரரிடமிருந்து இவ்வழக்கு காசோலையை தொகையான ரூ.15 லட்சத்தினை நான் வாங்கவில்லை.

**(எதிரி தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக எதிரிமனுதாரர் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)**

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2024.01.23 18:42:09 -1000

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**